Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

Chundikuli Branch Library

Y.M.C.A.

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

## வடபகுதி தபால்கள் அனுப்புவதில் அதிகாரிகளிடையே மீண்டும் இழுபறி

'குமண' கப்பலில் ஏற்றுவதற்கென கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து கொழும்பு துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட 800 தபால் பொதிகளை துறைமுக அதிகாரிகள் பொறுப்பேற்க மறுத்துவிட்டதாகவும் இதனால் அவை மீண்டும் மத்தியதபால் பரிவர்த்தனை நிலையத்திற்கே எடுத்துச் செல்லப்பட்டு விட்டதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. வடபகுதிக்கு கப்பல் மூலம் அனுப்பப்படும் தபால் பொதிகளைக் கையாளுவது தொடர்பாக தபால் திணைக்களம் துறைமுக பகுதிக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை செலுத்தத் தவறியமையே இவ்வாறு தபால்கள் திருப்பி அனுப்பப்பட்டமைக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பல தபால் பொதிகள் துறைமுக களஞ்சியத்தில் [4ஆம் பக்கம் பார்க்க]

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 09 [ 24-07-1993 ] சனிக்கிழமை ஓசை 156

# ஜனாதிபதியின் மட்டக்களப்பு விஜயம் ரத்து;

# பாதுகாப்பு குறித்த அச்சமே காரணமாம்!

## மக்களும் புறக்கணிப்பு!

(கொழும்பு)

மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்ட ஜனாதிபதி இடம்பெயர் சேவையில் திட்டமிட்டவாறு நேற்று ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா கலந்துகொள்ளவில்லை. ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர்கள் ஜனாதிபதியின் பாதுகாப்பு குறித்து திருப்தி தெரிவிக்காமையே இறுதிநேரத்தில் ஜனாதிபதியின் விஜயம் ரத்துச்செய்யப்பட்டமைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. இதேவேளை, இடம்பெயர் சேவையில் எதிர்பார்த்ததைவிட மிகக் குறைந்த எண்ணிக்கையான மக்களே கலந்துகொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று மட்டக்களப்பில் ஆரம்பமாகியஜனாதிபதிஇடம்பெயர் சேவையில் கலந்துகொள்வதென திட்டமிட்டிருந்த சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க தனது திட்டத்தை கைவிட்டுள்ளார். பாதுகாப்பு காரணங்களுக்காகவே இவ்வாறு அவரது விஜயம் ரத்துச் செய்யப்பட்டது.

கடந்த சில வாரங்களாக மட்டக்களப்பில் நாலாயிரத்திற்கு மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரும் பொலிசாரும்குவிக்கப்பட்டு அப்பகுதியில் பல புதிய முகாம்களும்காவலரண்களும் அமைக்கப்பட்டு வந்தன. மேலும் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கைது செய்யப்பட்டு முகாம்களில் அடைக்கப்பட்டனர். மட்டக்களப்பு வாவி மீன்பிடிக்கு முற்றாகத் தடைசெய்யப்பட்டது. வீடு வீடாக முகமூடிகளின் உதவியுடன் தேடுதல் வேட்டைகள் இடம் பெற்றன. மேலும் மட்டக்களப்பிற்கு வெளியேயிருந்து புதிதாக வருபவர்கள் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

மேலும் கடந்த சில நாட்களாக வீதி ரோந்துகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றனஉலங்குவானூர்திகள் வானில் வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றன. மட்டக்களப்பு வாவியில் பீரங்கிப்படகுகள் ரோந்தில் ஈடுபட்டுள்ளன. இவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் மத்தியிலும் சிறிலங்கா ஜனாதிபதியின் விஜயம் பாதுகாப்பு காரணங்களுக்காக ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர்களின் ஆலோசனைக்கு அமையவே இவ் விஜயம் ரத்துச்செய்யப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி வேட்டுக்கள்

மண்டைதீவில் இருக்கும் இராணுவத்தினர் தொடர்ந்து இரவு நேரங்களில் யாழ்ப்பாணத்தின் கரையோரங்களை நோக்கி கலிபர் வேட்டுக்களையும், இடைக்கிடை ஷெல் வீச்சுக்களையும் நடாத்தி வருகிறார்கள். இதனால் இவ் இடங்களில் மீன்பிடித் தொழில் செய்யும் மீனவர்கள் பெரும் பாதிப்படைந்து வருகிறார்கள்.

நேற்றையதினம் இரவு கல்முனை, மண்டைதீவுக் கடலில் தொழில் செய்துகொண்டிருந்த மீனவர்களை நோக்கி பலதடவை துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. [17]

## சந்தேகநபரை விடுவிக்க லஞ்சம் பெற்ற அதிகாரி

(கொழும்பு

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைச் செயலகக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக லஞ்சம் வாங்கினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்ட்டுக்கு கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி அழைப்பாணை அனுப்பியுள்ளார்.

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைச் செயலக குண்டு வெடிப்புச் சந்தேக நபர் கே. புகலிடம் வழங்கியதாகச் சந்தேகிக்கப்படும் கங்காதரன் மாதவனைப் பாதுகாக்க உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்ட் ரூவான் சிறி பெரேரா 1,50,000 ரூபா லஞ்சம் பெற்றார் என்று குற்றம் காட்டப்பட்டுள்ளது. சட்டமா அதிபர், லஞ்சச் சட்டத்தின் கீழ் இவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

பொலிஸ் பாதுகாப்பில் உள்ள சர்வேஸ்வரனை விடு

## விஜயதுங்காவின் முடிவு ராணுவ தரப்பில் சீற்றம்

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகால

## வீதித்தடைகள் பற்றி காவல்துறையினர் அறிவிப்பு

நல்லூர் கந்தசுவாமிகோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கீழ்க்காணும் வீதிகள் பின்வரும் சந்திகளில் தடை செய்யப்பட்டிருக்கும் என தமிழீழ காவல் துறையினர் அறிவித்துள்ளனர் இத்தடை 24-07-93 ஆம் திகதியில் இருந்து 18-08-93 ஆம் திகதி வரை தினமும் காலை 5.00 மணியிலிருந்து இரவு 10.00 மணிவரை நடைமுறையில் இருக்கும். அத்தடை இடங்கள் பின்வருமாறு:

யாழ் நகரில் இருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் வீதியில் ஆனைப்பந்திச் சந்தி.

சந்நர்மடம் சந்தியிலிருந்து கோவிலுக்குச் செல்லும் வீதியில் அரசடிச்சந்தி.

(4ஆம் பக்கம் பார்க்க)

யாழ் ஆஸ்பத்திரிக்கு

## மூன்றாம் கட்ட மருந்துகள் எடுத்து வரப்பட்டன

யாழ். போதனா மருத்துவமனைக்கானமூன்றாம் கந்தாயத்துக்கான மருந்துப் பொருள்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன. இம் மருந்துப் பொருள்களுடன் எக்ஸ் கதிர் பிலிம்களும் எடுத்து வரப்பட்டுள்ளன

அதேவேளை பிரித்தானிய அரசு மேற்படி மருத்துவமனைக்கு வழங்கிய சுமார் 21 கொள்கலன் மருந்துப்பொருள்களைக் கட்டம் கட்டமாக அனுப்பி வைக்கவுள்ளதாகவும் தெரியவருகிறது. சுமார் இரண்டு கொள்கலன் மருந்துப் பொருள்கள் அடுத்த கப்பலில் எடுத்து வரப்படும் என்று தெரியவருகிறது.

மேலும்இவ்வைத்தியசாலைக்கான 200 கே. வி. ஜெனரேற்றர் மிக விரைவில் எடுத்து வரப்படும் என்றும் தெரியவருகிறது.

வலி-மேற்கு பகுதிக்கு

## செஞ்சிலுவை பிரதிநிதிகள்

(கொழும்பு)

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைச் செயலகக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக லஞ்சம் வாங்கினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்ட்டுக்கு கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி அழைப்பாணை அனுப்பியுள்ளார்.

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைச் செயலக குண்டு வெடிப்புச் சந்தேக நபர் கே. சர்வேஸ்வரனுக்குப் (மனோ) தேகிக்கப்படும் சுங்காதரன் மாதவனைப் பாதுகாக்க உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்ட் ரூவான் சிறி பெரேரா 1,50.000 ரூபா லஞ்சம் பெற்றார் என்று குற்றம் காட்டப்பட்டுள்ளது. சட்டமா அதிபர், லஞ்சச் சட்டத்தின் கீழ் இவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

பொலிஸ் பாதுகாப்பில் உள்ள சர்வேஸ்வரனை விடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## கடவுச் சீட்டு மோசடி சிங்களவர் ஒருவர் கைது

(கொழும்பு)

கடவுச் சீட்டு மோசடியில் ஈடுபட்டிருந்த புதிய அரசியல் கட்சி ஒன்றின் அமைப்பாளர் கட்டுநாயக்காவில் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் ஒரு சிங்களவர். சிங்கள பௌத்த அமைப்பு ஒன்றுடன் நெருங்கிய தொடர்புடையவரான இவர் ஒரு சமாதான நீதவான் என்று பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிங்களவரின் கடவுச் சீட்டுகளுக்குத் தமிழ் இளைஞர்களின் 'தலையை மாற்றி' இவர் தமிழர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பியதாகக் கூறப்படுகிறது

பின்லாந்துக்குப் பயணம் மேற்கொள்ள கட்டுநாயக்கா விமான நிலையம் வந்த நான்கு தமிழ் இளைஞரையும், ஒரு யுவதியையும் பொலிசார் கைது செய்தனர். இவர்களு

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் கலந்துகொள்ளாது தீர்வை ஏற்படுத்த முடியாது

(லண்டன்)

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிங்கள அரசியல் கட்சிகள் மட்டும் ஒன்றிணைந்து தீர்வை தீர்மானிக்க முடியாது. இதில் சகல தமிழ் அமைப்புகளும் அங்கம் வகிக்க வேண்டும். ஏனெனில் பிரச்சினையுள்ளது தமிழர்களுக்கே. அவர்கள் இல்லாது தயாரிக்கப்படும் தீர்வு எதுவும் நிலையான தீர்வாக அமையாது என சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸிக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இன்றைய நிலைமைக்கு காரணம் முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவே. தமிழர் பிரச்சினை தொடர்பாக இதுவரைபலமாநாடுகள், குழுக்கள் கூட்டப்பட்டாலும் இன்றுவரை உருப்படியாக எந்த ஒரு தீர்வையும் ஐக்கிய தேசியக் கட்சி முன்வைக்கவில்லை. ஆளும் கட்சி ஒரு தீர்வை முன்வைக்காத நிலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## நள்ளிரவு எறிகணை வீச்சு மக்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

நேற்று நள்ளிரவுவேளை சிறிலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகளை நோக்கி அகோர எறிகணைத் தாக்குதல்களையும் கலிபர் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

நள்ளிரவு 12 மணிமுதல் 12-30 மணிவரை மண்டை தீவு பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரே தொடர்ச்சியான கலிபர் தாக்குதல்களையும், எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

இவற்றில் சில எறிகணைகள் கொட்டடி பகுதி மக்கள் வாழ்விடங்களில் வீழ்ந்து வெடித்தன. இதனால் அச்சமடைந்த மக்கள் அங்கிருந்து பெருமளவில் வெளியேறி யாழ் நகர பாதுகாப்பு வலயப் பகுதிகளில் தஞ்சமடைந்தனர்.

யப்பட்டு முகாம்களில் அடை... கப்பட்டனர். மட்டக்களப்பு மீட்டுக்கொண்டிருக்கின்றன.

## விஜயதுங்காவின் முடிவு ராணுவ தரப்பில் சீற்றம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி திட்டமிட்டவாறு மட்டக்களப்பு ஜனாதிபதி நடம்பெயர் சேவையில் கலந்து கொள்ளாமை இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் பாதுகாப்பிற்கென பெருமளவில் ஏற்பாடுகளை இராணுவ அதிகாரிகள் செய்திருந்தபோதும், ஜனாதிபதி இறுதி நேரத்தில் பயணத்தை ரத்து செய்தமையால் தமது பாதுகாப்பு ஏற்பாடுகள் மீது ஜனாதிபதிக்கு நம்பிக்கை இல்லையா என இராணுவத்தரப்பில் கேள்வி எழுப்புகின்றனர்.

இதேவேளை டி. பி. விஜயதுங்கா மட்டக்களப்பு விஜயத்தை ரத்துச் செய்தமையானது கிழக்கை இராணுவம் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவில்லை என்பதையே காட்டுவதாக பி.பி.சி. தெரிவித்தது.

(4ஆம் பக்கம் பார்க்க)

### 1983 தமிழர் மீதான வன்முறை

## மனத்தளவில் பிரிவினை அன்றே ஏற்பட்டு விட்டது

(லண்டன்)

1983 இல் சிங்கள அரசியல்வாதிகளால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட வன்முறை பாவத்திற்கு இன்று வரை இலங்கை அல்லற்படுகிறது. 1983 ஓர் திருப்பு முனையாகவே அமைந்து விட்டது. அப்போது நிலத்தளவில் பிரிவினை ஏற்படா விட்டாலும் மனதளவில் பிரிவினை ஏற்பட்டு விட்டது. இதற்கு முன்னரும் தமிழருக்கு எதிரான கலவரங்கள் நடந்துள்ளன, எனினும் இது போன்று நடக்கவில்லை. 1983 இற்கு பின் நடக்கும் போரின் உக்கிரத்தை நோக்கும் போது அதற்கு முந்தைய பூசல்கள் ஒரு பொருட்டே அல்ல. இவ்வாறு பி. பி. ஸியின் முன்னாள் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ் பத்து ஆண்டுகாலப் போர் என்ற தமது செய்திக் கண்ணோட்டத்தில குறிப்பிட்டார்.

1983 இற்கு பின் தமிழர்கள் இலங்கையை சிறப்பாக உருவாக்குவதில் தமக்கு ஒரு பங்கும் இல்லை என முடிவு செய்துவிட்டனர். பலர் வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்தனர். அங்குள்ள இளைஞர்கள் கிளர்ச்சியில் இறங்கினர். இந்தியாவில் பயிற்சி முகாம்கள் நிறுவப்பட்டன. இதனால் பலம் பொருந்திய கெரில்லாப் படை உருவாகியது.

கலவரம் முடிந்து வன்முறை நிறைந்த 10 ஆண்டுகள் முடிந்துவிட்டன. ஆனால் அந்தக்

(4ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ் 'பயங்கரவாதி'களின்

## ஒற்றர் அமைப்பாக ச. தே. செஞ்சிலுவைச் சங்கம்

வடக்கு, கிழக்கு பிரச்சினையால் நன்மை பெறுபவர்கள் பலர் சர்வதேச அமைப்புக்களிலும், மத நிலையங்களிலும் அங்கம் வகிக்கின்றனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தமிழ் 'பயங்கரவாதிகளின்' ஒற்றர் அமைப்பே.

இவ்வாறு பெனகமுவே நாயக்க தேரோ தெரிவித்துள்ளார். கொழும்பு நூல் நிலையத்தில்நடைபெற்ற வடக்கு, கிழக்கு பிரச்சினை அதன் வரலாறு மற்றும் தீர்வு' என்ற கருத்தரங்கில்கலந்து கொண்டு பேசியபோதே அவர்இவ்வாறு தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

பிலிம்களும் எடுத்து வரப்பட்டுள்ளன

அதேவேளை பிரித்தானிய அரசு மேற்படி மருத்துவமனைக்கு வழங்கிய சுமார் 21 கொள்கலன் மருந்துப்பொருள் என்று தெரியவருகிறது.

மேலும்இவ்வைத்தியசாலைக்கான 200 கே. வி. ஜெனரேற்றர் மிக விரைவில் எடுத்து வரப்படும் என்றும் தெரியவருகிறது.

### வலி-வடக்கு பகுதிக்கு

## செஞ்சிலுவை பிரதிநிதிகள் திங்களன்று செல்வர்

சிறிலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வலி-வடக்கு பகுதிக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரதிநிதிகள் எதிர்வரும் திங்களன்று செல்லவுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திரு. சன்றின், செல்வி ஜெசபின் ஆகியோரே அப்பகுதிக்கு செல்லவுள்ளதாகவும் இவர்கள் பலாலி முகாமிலும் வலி வடக்கு பகுதியிலும் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை பார்வையிடுவர் எனவும் தெரியவருகிறது (நி)

## லெப். செல்லக்கிளி அம்மான்; 10-ம் ஆண்டு நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

1983ஆம் ஆண்டு இதே தினத்தில் திருநெல்வேலியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது நடாத்தப்பட்ட வெற்றிகரத் தாக்குதலின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்ரினன்ட் செல்லக்கிளி அம்மானின் 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு யாழ். குடாநாட்டில் நேற்று இடம்பெற்றது.

திருநெல்வேலிதபால்பெட்டி சந்தியில் உள்ள லெப். செல்லக்கிளி அம்மான் நினைவுத் தூபிக்கு அருகில் நடைபெற்ற இந் நிகழ்வில் விடுதலைப்புலிகள் மூத்த உறுப்பினர் திரு. அப்பையா ஸ்தூபியில் உள்ள லெப். செல்லககிளியின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்தார். யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. செல்வராசா, விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் தேவர் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

இதேவேளை கல்வியங்காடு சந்தைப்பகுதியிலுள்ள லெப்டினன்ட் செல்லககிளி அம்மான் உருவப்படத்திற்கு தமிழீழ கல்வி கழக பொறுப்பாளர் வே. இளங்குமரன் மாலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## நாம் சுதந்திரமாக வாழ போராடவே வேண்டும்

### தேவர் தெரிவிப்பு

[நமது நிருபர்]

எந்தவொரு நாட்டு விடுதலையை எடுத்துக் கொண்டாலும் கூட அந்த நாட்டு மக்கள் போராடாமல், இரத்தம் சிந்தாமல், தியாகங்கள் செய்யாமல் சுதந்திரம் கிடைத்ததாக வரலாறு இல்லை. இந்த மண்ணிலே சுதந்திரமாக-மானத்தோடு நாம் வாழ வேண்டுமென்றால் நாங்கள் போராடித்தான் ஆகவேண்டும்.

இவ்வாறு நேற்று மாலை நல்லூரர் பகுதியில் இடம்பெற்ற 7ஆம் மாதங்களில் வீரச்சாவை தழுவிக்கொண்ட நல்லூர் வட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. தேவர் தெரிவித்தார்.

நல்லூர் வட்ட பொறுப்பாளர் திரு எழிலன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு பொன் தியாகம் ஈகைச்சுடரை ஏற்றி வைத்தார். நல்லூர் வட்டத்தில் 7-ம் மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 39 மாவீரர்களின் உருவப்படங்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

**மிருதங்கம்**

மிருதங்கம் நல்ல முறையில் உத்தரவாதத்துடன் ஒரு கிழமைக்குள் முழு வேலையும் செய்து பெற்றுக் கொள்ளலாம். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (5444)

**வியாபாரிகட்கு**

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள். லேஸ், நூல் வகைகள், எவர் சில்வர் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதனப் பொருள்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக் கொள்ள- ஜெயா அழகுசாதன மாளிகை. 177- A மின்சார வீதி,யாழ்ப்பாணம். (சி/6968)

**உடன் விற்பனைக்கு**

10 நாட்கள் வளர்ச்சியடைந்த புறொயிலர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' மானிடபாய். [5503]

**தேவை**

கோழித்தீன் வெற்றுப் பக்றுகள் தேவை. தொடர்பு- 'மில்க்வைற்'' (சி-7052)

**ஸ்ரீகாந்த்புத்தகசாலை**

இந்திய நாவல்கள், டிக்செனெறிகள், இலங்கை வெளியீடுகள். ஆங்கில தமிழ் சொற் களஞ்சியம், (மட்றாஸ் டிக்சனெறி) கொமிக்ஸ் மங்கை மலர் கழிவுவிலையில் நல்லூர் உற்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர் (சி-7070)

**தேவை**

வளர்ந்துவரும் உணவகத்திற்கு பெண் உதவியாளர்கள் தேவை. அனுபவமும்கல்வி அறிவும் மிக முகியம். அண்மையில் கிடைக்கப்பெற்ற நற்சான்று பத்திரங்களுடன் நேரில விண்ணப்பிக்க.முகாமையாளர், ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி (சி-7072)

**சாளரம் கலந்துரையாடல்**

முள்ளி தச்சுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் சாளரம் இதழ் வெளியீடு பற்றி திரு க. க. சந்திரன் அவர்

---

இன்று முதல் நல்லூரில் சுவைதேடும்

## உணவுப் பிரியர்களை ஜெசித்தாரா அழைக்கிறது

**ஜோ. எக்கட்டனின் ஜெசித்தாரா தனது சேவையை நல்லூரில் விஸ்தரிக்கின்றது.**

நல்லைக் கந்தன் எதிரே இன்று 24ஆம் திகதி ஆடி 1993ஆம் ஆண்டு

**சுவைச் சோலையில்**

608 2 பருத்தித்துறை வீதி, (நல்லூர் கந்தன் முன்பாக) தனது ஏகோபித்த வாடிக்கையாளர்களின் நலன்கருதி இன்று முதல் சேவையை ஆரம்பிக்கின்றது.

நீங்களும் முன்கூட்டியே பதிவு செய்து ஏமாற்றத்தை தவிர்க்கவும்.

மரக்கறி / விரதச்சாப்பாடு
பார்சல் ரூபா 25/- மட்டுமே

பகல் 12. 00 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

ஜோ. எக்கட்டனின் ஜெசித்தாரா
சுண்டிக்குளி மகளிர் முன் ஒழுங்கை, சுண்டிக்குளி.

ஜெசித்தாரா புது யுகத்தில் புது உருவம்

(சி/7072)

---

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் வ-து) சுன்னாகம்

## தமிழ் தட்டெழுத்தாளர் பதவி வெற்றிடம்

மேற்குறிப்பிட்ட பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி:- தமிழ் தட்டெழுத்தாளர் குறி. இல 305:13

சம்பளத் திட்டம்:- 730/- 1055/- / 20x10: 25x5

இத்துடன் சங்கத்தினால் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

தகைமை:- க. பொ. த (சாதாரண தரத்தில்) சம்பந்தப்பட்ட மொழியினை உள்ளடக்கியதாக ஆறு பாடங்களிலான சித்தியும், தமிழ் தட்டெழுத்தாற்றல் நிமிடத்திற்கு 20 சொற்களுக்கு குறையாமலும்,

வயது:- விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்கு குறையாமலும், 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 09. 08 93

ரூ 10/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தையும், மேலதிக விபரங்களையும் வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
சுன்னாகம்.
21. 07. 93 (சி/7066)

---

## சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து) சுன்னாகம்

''சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 31-07-93 இல் நடைபெறும் நிதியாண்டு இருப்பெடுத்தலை முன்னிட்டு ஏழாவது சுற்று மண்ணெய் விநியோகம் மற்றும் நிவாரண விநியோகம் ஆகியவற்றை குறித்த திகதிக்கு முன்னர் பாவனையாளருக்கு வழங்கி முடிப்பதற்காக விடுமுறை தினமான 25 07-93 ஞாயிறன்று தனது கிளைகள் வியாபாரத்திற்காகத் திறந்திருக்கும் என அதன் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார் ''

-பொது முகாமையாளர்

(சி-7069)

---

புங்குடுதீவு நயினாதீவு பல நோ. கூ. சங்கம்

## வாக்காளர் பட்டியல் 30-06-93 வரை

எமது சங்கத்தின் 30 06 93 வரையிலான வாக்காளர் பட்டியல்கள் பின்வரும் கிளைகளில் 21.07 93 தொடக்கம் 31.07 93 வரை அங்கத்தவர்களின் பார்வைக்காக வைக்கப்படும். இதில் ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் எழுத்துமூலம் 01-08-93 தொடக்கம் 10-08-93-ம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமோ ''செயலாளர்,
புங்குடுதீவு நயினாதீவு பல நோ. கூ, சங்கம்,
201/1 3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விபரம்

கிளை இல. 1, 2, 6, 7, 12, 13, 14, 15, 16,
ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை இல. 3. 5
இல. 15, சிறாம்பியடி வீதி,
மணியம கட்டடம், யாழ்பபாணம்.

கிளை இல. 9
இல. 147, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்


கிளை இல. 10
இல 174, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

கிளை இல. 19, 20
இல. 201/1, 3-ம் குறுக்குத்தெரு,
தலைமைக்காரியாலயம, யாழ்பபாணம்.

செயலாளர் (சி-7063) தலைவர்

---

## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி



---

## 41-ம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



மலர்வு
02- 02- 1936

உதிர்வு
14- 06- 1993

அமரர் **பேதுருப்பிள்ளை கபிரியேல்பிள்ளை**

(செல்வரெட்ணம்)

எமது குடும்பத்தின் இனிய தலைவனாக வாழ்ந்து 14. 6 93இல் இறைவனடி சேர்ந்த பேதுருப்பிள்ளை கபிரியேல்பிள்ளை (செல்வரெட்ணம்)யின் மரணச் சடங்கிலும், 7ஆம் நாள் வைபவத்திலும், 31-ம் நாள் இரங்கல திருப்பலியிலும், வீட்டு வைபவங்களிலும், கலந்தும் புத்தகம் வெளியிட்டும் இரங்கல் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும், இரங்கல் செய்திகள் அனுப்பியும், மலர் வளையங்கள் சாத்தியும், அஞ்சலி உரைகள் ஆற்றியும், ஆறுதல்கள் கூறியும், உணவு வகைகள் வழங்கியும், உதவிகள் பல புரிந்து எம்மை தேற்றிய பல்கலைக்கழகத்தினர், கொக்குவில் இந்துக் கல்லூரியினர், இலங்கை வங்கியினர், மக்கள் வங்கியினர், சென்றலையிற் விளையாட்டு கழகத்தினர், புனித நீக்கிலஸ் சனசமூக நிலைய நிர்வாகிகள், இளைஞர், மகளிர், கடற்றொழில் மன்றங்கள், மரியாயின் சேனையினர், 2 மணித் திருமணித்தியால கூட்டத்தினர், நாவாந்துறை றோ. க. த க. வித்தியாலயத்தினர், செபவழிபாட்டு குழுவினர். வண. குருக்கள், வண. சகோதரிகள் பீட பரிசாரகர்கள், விளையாட்டுத்துறை நண்பர்கள், உற்றார், உறவினர் யாவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றி, வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி மே. கபிரியேல்பிள்ளையும் குடும்பத்தினரும்.

23, நாவாந்துறை,
யாழ்ப்பாணம். (5427)

---

## நினைவு கூருகின்றோம்... 1993-07-24

1983ஆம் ஆண்டு இதேதினத்தில் மானிப்பாயில் பேரூந்தை வழிமறித்த சிறிலங்கா இராணுவத்தினரால் கீழே இறக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டவரான 'மனிதன்' பத்திரிகை ஆசிரியர் மற்றும் இதே சம்பவத்தின் போது படுகொலை செய்யப்பட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள் உட்பட பலதமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட திருநெல்வேலியைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர், சங்கானையைச் சேர்ந்த தமிழிளைஞன் உட்பட பல தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு மருத்துவமனையில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த.

★ **மாயா** (— மாயக்கிருஷ்ணன்-கோரக்கண்டல், துணுக்காய்-முல்லைத்தீவு)

யாழ்ப்பாணத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட

யில் கிடைக்கப்பெற்ற நற்சான்று பத்திரங்களுடன் நேரில விண்ணப்பிக்க.முகாமையாளர், ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி

(சி-7072)

### சாளரம் கலந்துரையாடல்

முள்ளி தச்சுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் சாளரம் இதழ் வெளியீடு பற்றி திரு க. க. சந்திரன் அவர்களின் தலைமையில் நடக்கும் கலந்துரையாடல் இன்று காலை 9 முதல் பகல் 11 மணி வரை ஆனைக்கோட்டை பாலசுபபிரமணிய வித்தியாசாலையில் நடைபெறும்

### தளபாடம் அன்பளிப்பு

(தென்மராட்சி)

யா/போக்கட்டி அரசினர் வித்தியாலயத்தில் மாணவ, மாணவிகள் கல்வியினை கற்பதற்கு தளபாடங்கள் இல்லாமல் பல வருடங்களாக மர நிழல்களில் தமது கல்வியை நிலத்தில் இருந்து கற்று வந்தனர் இவர்களின் கஷ்டத்தினை நீக்குவதற்காக அவ்வூர் பொதுமக்கள் 10000/- ரூபா பெறுமதியான தளபாடத்தினை புதிதாக பாடசாலைக்கு அன்பளிப்பு செய்துள்ளனர்.

இவ் அன்பளிப்பு வைபவம் 21. 7. 93 புதன்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது. புதிதாக செய்யப்பட்ட தளபாடத்தினை பெற்றோர்கள் அப்பாடசாலை அதிபர் திரு. அ. க. சிவசம்பு, கொத்தணி அதிபர் திரு த கந்தையா அவர்களிடமும் கையளித்தனர் இப்பாடசாலைக்கு மேலும் உதவிகளை தாம் வழங்குவதற்கு முன் வந்துள்ளனர். [86]

## கொட்டகை அமைப்பு

யாழ்/ எழுதுமட்டுவாழ் தமிழ் லவன் பாடசாலையின் மாணவர்கள் கல்வி கற்பதற்கு இடம் இல்லாததை நிவர்த்தி செய்யும் பொருட்டு அப் பகுதி மக்களும் பழைய மாணவர்களும் சேர்ந்து. தமது செலவில் 60 அடி நீளமும 20 அடி அகலமுமான கொட்டகை ஒன்றை அமைத்து கொடுத்துள்ளனர். (86)

வயது:- விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்கு குறையாமலும், 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 09. 08 93

ரூ 10/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தையும், மேலதிக விபரங்களையும் வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
சுன்னாகம்.
21. 07. 93

(சி/7066)

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 1918-9-26

முருகையன் மடியில் 1985-7-24

## முத்துக்குமாரு மயில்வாகன சுவாமிகள்

குருபூசை

எங்கள் குருவே உங்கள் இறுதி மூச்சுவரை உங்கள் பாதம்பட்ட ஆனந்த ஆச்சிரமத்திலேயே நீங்கள் விட்டுச் சென்ற புனிதப் பணியை நாங்கள் தொடர்கின்றோம். நாங்கள் எமது மூச்சுள்ளவரை நீங்கள் செய்தது போலவே ஆனந்த ஆச்சிரமத்தில் அன்னதானப் பணியை உங்கள் தொண்டர்களாகிய நாங்கள் செய்து வருகிறோம்.

என்றும் உங்கள் ஆசியைவேண்டும்


ஆனந்தாச்சிரமத் தொண்டர்கள்.

பி. கு. 25-7-93 ஞாயிறு (நாளை) எமது குருவின் நினைவுநாள் (திதி) ஆனந்த ஆச்சிரமத்தில் விமரிசையாகக் கொண்டாடப்படும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆனந்தாச்சிரமத் தொண்டர்கள்.

ஆனந்தாச்சிரமம்.
செல்வச்சன்னதி,
தொண்டமனாறு.

(சி-7067)



## மகாதேவா இராஜகாந்தன்

(பவுண்)

(மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவன்)


| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 26-05-1964 | 24-07-1983 |

என்றும் உன் பிரிவால் வாடும்
அம்மா, தங்கை.

வடக்கு, சண்டிலிப்பாய். (5117)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 17 — 02 — 1951



மறைவு: 08 — 08 — 1992

அமரர்

## திரு. வை. சண்முகதாசன்

திதி: 24-07-93

ஆண்டொன்று சென்றாலும்
தங்கள் நினைவலைகள்
நிலைத்திருக்கும்.
ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

மருதடி,
சாவகச்சேரி வடக்கு.

மனைவி, பிள்ளைகள்
உறவினர்.

(5450)

1983ஆம் ஆண்டு இதேதினத்தில் மானிப்பாயில் பேருந்தை வழிமறித்த சிறிலங்கா இராணுவத்தினரால் கீழே இறக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டவரான 'மனிதன்' பத்திரிகை ஆசிரியர் மற்றும் இதே சம்பவத்தின் போது படுகொலை செய்யப்பட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள் உட்பட பலதமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட திருநெல்வேலியைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர், சங்கானையைச் சேர்ந்த தமிழிளைஞன் உட்பட பல தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு மருத்துவமனையில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த.

★ **மாயா** (— மாயக்கிருஷ்ணன்-கோரக்கண்டல், துணுக்காய்-முல்லைத்தீவு)

யாழ்ப்பாணத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விழுப்புண் அடைந்து மருந்துவமனையில் எமைப்பிரிந்த,

**புதியவன்** (கிங்ஸ்லி ராஜசூரியர்-சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோயில்-மன்னார்)

1988ஆம் ஆண்டு அச்சுவேலிப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய,

**கணேஸ்/றிச்சாட்** (கந்தப்பிள்ளை கணேசமூர்த்தி-நாவற்காடு, அச்சுவேலி தெற்கு-யாழ்)

1989ஆம் ஆண்டு ஆனைக்கோட்டை-உயரப்புலம் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1990ஆம ஆண்டு கிளிநொச்சி-பரந்தனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின்போது வீரச்சாவெய்திய,

**மிரேஸ்** (சோமசுந்தரம் பரமேஸ்வரன்-வெருகல்-முட்டுச்சேனை)

**ரதீஸ்** (சி. ஜெகநாதன் —)

**சுங்கன்** (சண்முகராசா சுரேஸ்குமார்-பொற்பதிவீதி, கொக்குவில்-யாழ்)

அம்பாறை-கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன பொததுவிலைச் சேர்ந்த தமிழ்பொதுமகன்,

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ.க.வெ. நடவடிகையின்போது புல்லாவெளியிலிருந்து அப்பகுதியை நோக்கி முன்னேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**கப்டன் நந்தன்** [சின்னத்துரை ஜீவானந்தன்-மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி-யாழ்]

**குரு பாபு** (வாமதேவன் விக்கினேஸ்வரன்-தங்கவோடை, காரைநகர்-யாழ்)

**சுருளி** (சிவகுரு சண்முகராசா-மயிலிட்டிவடக்கு-யாழ்)

**டயஸ்** (நாகமுத்து சிறிசங்கர்-மோகன்வீதி அச்செழு, நீர்வேலி-யாழ்)

**வினித்தா** (இலங்கேஸ்வரி தியாகராசா-புலோலி தெற்கு -பருத்தித்துறை)

**தவச்செல்வி** (சித்திராஞ்சலி ராமநாதன்-கேடிஸ்நகர், கெற்பலி-மிருசுவில்)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-7065)

சிந்தனைக்கு

வீர சுதந்திரம் வேண்டி நின்றோர்
வேறு எதுவும் வேண்டுவரோ!
- சுப்பிரமணிய பாரதியார்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-07-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## 1983 ஜூலை

பத்து வருடங்களின் மூன். 1983 யூலை இறுதி வாரம்.

தமிழரின் வாழ்வில் வீரமும், துயர்களும் படிந்த நாட்கள்.

''போரென்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்'' என, 1977 இல் பாராளுமன்றத்தில், ஆயுதப்போராட்டம் என்ற சிந்தனையே அற்று, சிங்களப்பேரினவாதிகளிடம் சுதந்திரத்தை இரந்து கேட்டுப் பெற்றுவிடலாம் அல்லது வாய் வீச்சின் மூலம் சாதித்துவிடலாம் என எண்ணிய தமிழ்த் தலைவர்களைப் பார்த்து அப்போதைய பிரதம மந்திரி ஜே. ஆர். ஜயவர்த்தனா விடுத்த அறைகூவலுக்கு சுதந்திரத்தை தமிழர்கள் போராடிப் பெற்றுவிட முடிவு செய்துவிட்டதாக ஆணித்தரமாக வெளிப்படுத்திய நேரம் அது.

அதாவது, 1983 யூலை 23இல் திருநெல்வேலியில் சிங்கள இராணுவத்தினர் 13பேர் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்குப் பலியாகியமை இதனையே உலகிற்குப் பறைசாற்றியது. ஆனால், இது தனியாக ஓர் இராணுவ ரீதியான முக்கியத்துவம் பெற்ற ஒரு தாக்குதல் மட்டுமல்ல. இலங்கையின் அரசியல் வரலாற்றையே திசை திருப்பியதோடு, தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் பால் உலகின் கவனத்தை ஈர்த்த ஒரு தாக்குதலும் ஆகும்.

ஆனால் இத்தாக்குதலைத் தொடர்ந்து சிங்களப் பேரினவாதம் தனது உண்மைச் சொரூபத்தை உலகிற்குக் காட்டியது. தாக்குதல் நடந்து அடுத்த நாட்காலை, சிங்கள இராணுவம் யாழ்ப்பாணத்தில் தனது கோரத் தாண்டவத்தை நடத்தியது. அப்பாவிகளான பஸ் பயணிகளும், வீடுகளில் இருந்தவர்களும் வீதிகளில் இழுத்துப்போடப்பட்டு சுடப்பட்டார்கள்.

இதேவேளை, அடுத்த நாளில் இருந்து அதாவது 25 ஆம் திகதியில் இருந்து சிங்களப்பேரினவாதம் தென்னிலங்கையில் தனது வெறியாட்டத்தை ஆடியது. நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். சொத்துக்கள் சூறையாடப்பட்டன. தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. பல நூறுகோடி ரூபா பெறுமதியான தமிழரின் சொத்துக்கள் அபகரித்துச் செல்லப்பட்டன. தமிழர்கள் பாதுகாப்பு தேடி வடக்கேயும், இந்தியாவிற்கும் ஓடினர்.

இவையாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்தன 25, 27 ஆம் திகதிகளில் சிங்களக் காடையர்கள் அரசாங்கத்தின் உதவியுடன் வெறிச்

# கொழும்பு பொலிசாருக்கு நீதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

நீதிமன்றத்திற்கு வராத பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் நீதிபதியின் கண்டனத்திற்கும் எச்சரிக்கைக்கும் இலக்கானார்

கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் ஆஜராகி சாட்சியங்களை நெறிப்படுத்த வேண்டிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் நீதிமன்றத்திற்கு வராததால் அவர் கடந்த வியாழக்கிழமை நீதிமன்றத்திற்கு வரவழைக்கப்பட்டார்.

இது நீதிமன்றத்தை அவமதிக்கும் ஒரு செயலாக கருதப்படலாம் என்று எச்சரித்த நீதிபதி சரத் அம்பேபிட்டிய அவரை பத்தாயிரம் ரூபா சரீரப் பிணையில் கைச்சாத்திட்டு செல்லும்படி பணிப்புரை விடுத்தார்.

# கைக்குண்டுவீச்சு தாக்குதல் அரசியல் நோக்குடையதே

சு. க. செயலாளர்

(கொழும்பு)

கொலைப் பயமுறுத்தல்கள் மற்றும் குண்டு வீச்சுக்கள் மூலம் என்னை யாரும் தவறான வழிக்கு திசை திருப்பிவிட முடியாது என்று சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்க கூறியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை தமது வீட்டுக்கு முன்பாக கைக்குண்டு வீசப்பட்டது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் கடந்த 35 வருடங்களாக அரசியலில் ஈடுபட்டு வரும் எனக்கு தனிப்பட்ட எதிரிகள் கிடையாது அரசியல் நோக்கங்களுக்காகவே எனது வீட்டிற்கு குண்டு வீசப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

ஜீப்பில் வந்த நால்வர் வீசிய இக்குண்டு வெடித்தமையால் சேனநாயக்க வீட்டின் முன்பாக நின்ற காரும், அவரது வீட்டுகண்ணாடி ஜன்னல்களும் பலத்த சேதம் அடைந்துள்ளன

மக்கள் வங்கியின்

# பதவி உயர்வுகளின் போது தமிழர்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

மக்கள் வங்கியில் உயர் அதிகாரிகள் தரத்துக்கான பதவி உயர்வுகளில் தமிழ் அதிகாரிகள் புறக்கணிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் மாதத்தில் ஏழு பேருக்கு உதவிப் பொதுமுகாமையாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டது. மேலும் மே மாதத்தில் ஏழு அதிகாரிகளுக்கு உதவிப்பொது முகாமையாளராக பதவிஉயர்வு கிடைத்தது. இதே காலப்பகுதியில் 21 பேர் தரம் ஒன்றிற்குப் பதவி உயர்த்தப்பட்டார்கள்.

வழங்கப்பட்ட மேற்படி 35 பதவி உயர்வுகளில் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த ஓர் அதிகாரிக்குத்தானும் பதவி உயர்வு வழங்கபபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பதவி உயர்வில் சேவை மூப்பு அடிப்படையில் இரண்டாம் மூன்றாம் நிலையிலிருந்த இரு தமிழ் அதிகாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், இவர்கள் சேவைகாலத்தில் எவ்விதகுற்றமும் இழைக்கவில்லை என்றும் தெரிவிக்கப் படுகிறது.

# நெவிலின் பிரேரணைக்கு ஐ.தே.க. எதிர்ப்பு

(கொழும்பு)

களுத்துறை மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் நெவில் பர்ணான்டோ பாராளுமன்றத்தில் கொண்டுவரவுள்ள தனிநபர் பிரேரணைக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவு அளிக்கப் போவதில்லை என மந்திரிசபைப் பேச்சாளர் ஹரோல் ஹேரத் தெரிவித்துள்ளார்.

கட்சி மாறினால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கும் அரசியலமைப்புச் சட்டபிரிவிற்கு திருத்தப் பிரேரணை கொண்டுவர நெவில் பர்ணான்டோ முயற்சிப்பது தெரிந்ததே.

# ராஜீவ் காந்தி கொலை; புலிகள் மட்டுமே பொறுப்பு

அரச தரப்பு வக்கீல்

(கொழும்பு)

முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டமைக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் மாத்திரமே பொறுப்பு என்று இக்கொலை தொடர்பாக விசாரணை செய்த இந்திய மத்திய புலனாய்வுபணியகத்தின்(சி.பி ஐ) விசேட விசாரணைக்குழு சார்பில் விசேட நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

ராஜீவ் காந்தி கொலையில் வேறு இலங்கைத் தமிழ்க்குழுக்களுக்கும் அமெரிக்காவின் மத்திய புலனாய்வுப் பணியகத்திற்கும் (சி ஐ. ஏ) இருந்திருக்கக்கூடிய தொடர்புகள் குறித்து விசேட விசாரணைக் குழு விசாரிக்கவில்லையென ராஜீவ் கொலைவழக்கில் ஆஜராகும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் தெரிவித்தகுற்றச்சாட்டை நிராகரித்த அரசு தரப்பு வழக்கறிஞர் பி ராஜமாணிக்கம், 'ராஜீவ் காந்தி கொலையில் வேறு இலங்கைத்தமிழ்க் குழுக்களின் பங்கு இருக்கிறதா என்பதை விசேட விசாரணைக்குழு பூரணமாக ஆராய்ந்தது இக்கொலையில் புலிகளுக்குத்தான் சம்பந்தம் இருக்கிறது என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமாகியது' என்று குறிப்பிட்டார்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களுக்கான தனது பதில் வாதத்தை ஆரம்பித்த இராஜமாணிக்கம் தெரிவித்ததாவது:

இக் கொலையில் புலிகளுக்கு இருக்கக்கூடிய தொடர்பு குறித்துவிசாரணையின் போது நளினியும் முருகனும் ஊர்ஜிதம் செய்ததன் பின்னரே விசேட விசாரணைக்குழு புலிகளின் தொடர்பு குறித்து அக்கறை செலுத்தத் தொடங்கியது. இக் கொலையை தாங்கள் செய்யவில்லையென புலிகள் நிராகரித்திருந்தார்கள்- பத்திரிகைகளும் புலிகளின் சம்பந்தம் குறித்து பல ஊகங்களை வெளியிட்டன. இவை யெல்லாவற்றையும் கண்டு விசேட விசாரணைக்குழு அதன் திசையை திருப்பவில்லையென்றும் அவ்வழக்கறிஞர் மேலும் குறிப்பிட்டார்.

# கட்டுநிதி அனுப்பப்பட்டது

இம்மாத ஆசிரியர் சம்பளக் கட்டுநிதி யாழ். கல்வித்திணைக்களத்தினால்சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான நிதி உதவியாளரிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதே சமயம் சில கோட்டக் கல்வி அலுவலகங்கள் ஆசிரியர்களுக்குரிய சம்பளப் பத்திரங்களையும் அதிபர்களிடம் நேற்றுமுன் தினமே வழங்கின. அத்துடன் யாழ். கல்வித் திணைக்களத்திலும் கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் கடமையாற்றும் பொதுநிர்வாக மற்றும் கல்வி அதிகாரிகளினதும் இம் மாதச் சம்பளமும் கடந்த புதனன்றே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வாக்களிப்புக்கு அ. அட்டை சட்டத்திற்கு எதிரானது

இ. தொ, கா. தீர்மானம்

(கொழும்பு)

தேர்தல்களில் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கோருவது அடிப்படையில் ஒரு மனித உரிமை மீறல் ஆகும். அதேவேளை 1988ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட குடியுரிமை சட்டத்திற்கும் முரணானதாகும். எனவே இதனை உடனடியாக மாற்றியமைக்கும் வகையில் மறு பரிசீலனை செய்தல் அவசியமானதாகும் என்று இ. தொ. கா நிர்வாக சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கடந்த சனியன்று, கண்டி இந்து சீனியர் பாடசாலையில் இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ் தொண்டமான் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிர்வாக சபைக் கூட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் அடையாள அட்டை பெறுவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மலையகத்தில் ஜனசவிய திட்டம் அமுலாகும் விதம் மலையக மக்களுக்கு எதிராக திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இனவாதப் பிரசாரம் என்பன போன்ற பல விடயங்களும் ஆராயப்பட்டன.

அநுராதபுரத்தில்

# புத்தர் சிலையின் தலை திருட்டு போனது

(கொழும்பு)

அநுராதபுரம் புனித பிரதேசத்திலுள்ள 12 அடி உயரமான புராதன புத்தர் சிலை ஒன்றின் தலை திருட்டுப்போய் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிரி விகாரையில் இருந்த அந்தச் சிலை விழுந்திருந்த சமயம் திருடர்கள் தலையைத் திருடிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

புத்தரின் தலையில் விலை உயர்ந்த இரத்தினக் கற்கள் மற்றும் புனிதமான பண்டைய பொருள்கள் இருந்திருக்கலாம் என்று புதைபொருள் ஆராய்ச்சி அதிகாரி ஒருவர் தெரிவித்தார் புராதனமான புத்தர் சிலைகளில் விலை உயர்ந்த இரத்தினக் கற்கள் வைக்கப்பட்டிருப்பது வழக்கம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

புதையல் தேடுபவர்கள் புத்தரின் தலையைத் திருடிச் சென்றிருக்கலாம் என்று பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

இந்தச் சிலை வரலாற்றுப் பதிவேடுகளின்படி கி பி. 4ஆம் நூற்றாண்டு பழமையானது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சிலை,புத்தர் இருக்கும் நிலையில்உள்ள சிலையாகும்.

# காவிரி பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும்

காங்கிரஸ் நம்பிக்கை

(சென்னை)

காவிரி நதிநீர் பிரச்சினைக்கு ... ரின் உண்ணாவிரதத்தை அடு

கம்போடிய அரசியலில்

# அமெ. தலையீடு கூடாது

செல்லப்பட்டனர். தமிழர்கள் பாதுகாப்பு தேடி வடக்கேயும், இந்தியாவிற்கும் ஓடினர்.

இவையாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்தன 25, 27 ஆம் திகதிகளில் சிங்களக் காடையர்கள் அரசாங்கத்தின் உதவியுடன் வெலிக் கடைச் சிறைச்சாலையில் நடத்திய படுகொலைகள் ஆகும். சிறைச்சாலை காவலாளிகள் பார்த்துக்கொண்டு நிற்கும் வேளையில் இடம்பெற்ற இப் படுகொலையானது உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சிறைச்சாலைகளில் கூட தமிழர்களைப் பாதுகாக்க முடியாது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடானது, தமிழர்கள் போராட வேண்டிய அவசியத்தை உலகிற்கு உணர்த்தியது.

ஆனால், இதைப்பற்றியோ அன்றி தமிழர்களின் அழிவு பற்றியோ சிங்களத் தலைவர்கள் எவரும் கவலைப்படவில்லை இனக்கலவரம் தொடங்கி மூன்று தினங்களின்பின் தொலைக்காட்சியில் தோன்றிய அப்போதைய ஜனாதிபதி ''நான் சிங்கள மக்களின் தலைவனாக இருக்கவே விரும்புகிறேன்'' என குறிப்பிட்டு தன் சுயரூபத்தை வெளிப்படுத்தினார். இது சிங்கள அரசியல்வாதிகளின் மனோநிலையைப் பிரதிபலித்ததோடு, சிங்களக் காடையர்களுக்கு மேலும் தூண்டுதலாக அமைந்தது.

இதேவேளை வீரமும், துயரும் நிறைந்த அவ் 1983 யூலை ஏற்படுத்திய விளைவு பாரிய அளவினதாகும். சிறிய அளவினதான எண்ணிக்கையுடைய உறுப்பினர்களைக் கொண்டிருந்த தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை, ஆயிரக் கணக்கான போராளிகளைக் கொண்டதாகவும், நவீன ஆயுதங்களைக் கொண்டதாகவும் மாற்றியுள்ளது. அன்றுஒளிந்திருந்து அடித்துவிட்டு தப்பிஓடிய இயக்கம் இன்று தமது தாயகத்தின் ஒரு பகுதியை தனது கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளது. அதாவது ''இலங்கைத் தீவில் இரு இராணுவங்கள்'' என்ற நிலையை உருவாக்கியுள்ளது.

இவ்வாறு இராணுவ ரீதியாக மட்டுமல்ல, கடந்த பத்து ஆண்டுகளில் ஏற்பட்ட அரசியல்மாற்றங்கள் பலவற்றிற்கும் இத்தாக்குதல் வித்திட்டது. தென்னாசியாவின் அரசியலிலேயே பெரும் தாக்கத்தை விளைவிக்கதக்கதாக மாறிவிட்ட தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டம் இன்று இலங்கையின் அரசியலையே வழிநடத்தும் சக்தியாக மாறியுள்ளது. இதனை ஓரளவு தெளிவுபடக் கூறின் இலங்கையின் வரலாற்றை தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ளது.

## விரைவில் தீர்வு காணப்படும்

### காங்கிரஸ் நம்பிக்கை

(சென்னை)

காவிரி நதிநீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு ஏற்படும் என்று காங்கிரஸ் கட்சி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

காவிரி நதிநீர் பங்கீடுதொடர்பாக கண்காணிப்புக் குழு அமைக்கப்படுவதற்கு கர்நாடக மாநில அரசு எதிர்ப்பு தெரிவித்திருப்பது பற்றி காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் வி.என்.காட்கிலிடம் கேட்கப்பட்டதற்கு பதிலளித்த அவர் இந்த நம்பிக்கையை தெரிவித்தார்.

அத்துடன் தமிழக முதல்வரின் உண்ணாவிரதத்தை அடுத்து பெங்களூருக்கும் சென்னைக்கும் விஜயம் மேற்கொண்ட மத்திய நீர்வளத் துறை அமைச்சர் வி.சி. சுக்ளா சம்பந்தப்பட்ட தரப்பினர்களோடு பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும், அவர் நம்பிக்கையோடு இருப்பதாகவும் காட்கில் தெரிவித்தார்.

இதனிடையே மத்திய நீர்வளத்துறை அமைச்சர் வி.சி சுக்ளா பிரதமர் நரசிம்மராவை சந்தித்துப் பேச்சு நடாத்தியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது

மாட்றிட் ஒப்பந்தம் தொடர்பான

## பாராளுமன்றவாக்கெடுப்பில் பிரிட்டன் அரசு தோல்வி

(லண்டன்)

நெருக்கமான ஐரோப்பிய ஐக்கியம் குறித்த மாட்றிட் ஒப்பந்தத்தை ஊர்ஜிதம் செய்வதான அதி முக்கியமான ஒரு யோசனையில் பிரிட்டன் அரசு எட்டு வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றுப் போயுள்ளது. இந்த யோசனை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் சேர்ந்து ஆளும் கன்சர்வேட்டிவ் உறுப்பினர்கள் சிலரும் வாக்களித்தமையினாலேயே பிரிட்டிஷ் அரசு தோல்வியை தழுவ நேரிட்டுள்ளது இந்தப் பிரச்சினையை அரசாங்கம்கையாளும் விதம் தொடர்பாக பிரதமர் ஜோன் மேயர் பின்னர் நம்பிக்கை வாக்கெடுப்பு ஒன்றை நாடினார். இதன் மூலம் பிரிட்டன் பிரதமர் தனது அரசின் எதிர்காலத்தை பணயம் வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

## இந்திய செயற்கைக்கோள் இன்சாட் ஏவப்பட்டது

(சென்னை)

இந்தியாவின் இன்சாட் 2 பி என்னும் செயற்கைக்கோள் நேற்றுக் காலை 4.29 க்கு வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவப்பட்டது. பிரெஞ்சு கயானாவிலுள்ள குரூஸ் விண்வெளி மையத்திலிருந்து ஏவப்பட்ட இன்சாட் 2 பி 1906 கிலோகிராம் எடை கொண்டதாகும் இந்த செயற்கைகோள் செலுத்தப்பட்ட 26 நிமிடங்களின் பின் தாய்க்கலத்திலிருந்து பிரிந்து விண்வெளியில் தனியாக சென்றது. இந்தியாவின் பதினைந்தாவது செயற்கைக் கோளான இது 78 கோடி ரூபா செலவில் உருவாக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

இதில் தகவல் தொடர்பு மற்றும் ஒலிபரப்புக்கு தேவையான ரான்ஸ்மீட்டர்களுடன், வானிலைஆராய்ச்சிக்கு தேவையான சாதனங்களும் பொருத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

# அமெ. தலையீடு கூடாது ஆசியான் கோரிக்கை

(சிங்கப்பூர்)

கம்போடியாவின் அரசியல் நிகழ்ச்சிகளில் தலையீடு எதையும் செய்ய வேண்டாம் என்று சிங்கப்பூரில் நடைபெறும் ஆசியான் அமைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு அமெரிக்காவிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இம் மாநாட்டை தொடக்கி வைத்துப் பேசிய சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் தமது பேச்சில், பனிப்போர் காலகட்டத்திற்குப் பின்னர் ஆசிய பசிபிக் நாடுகளின் உறவில் புதிய அத்தியாயம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டிருப்பதாக தெரிவித்தார். சீனாவும், ரஷ்யாவும் நெருங்கி வருவதும், இந்தியாவுடன் ஆக்கபூர்வ பேச்சுக்கள் ஆரம்பமாகியிருப்பதும் இப் பிராந்தியத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டது.

கமரூச் கெரிலாக்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுத்தால் கம்போடியாவிற்கான அமெரிக்க உதவிகள் நிறுத்தப்படும் என்று அமெரிக்கா எச்சரிக்கை செய்திருப்பது தொடர்பாகவே வெளியுறவு அமைச்சர்கள் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர்என்பதுகுறிப்பிடத்தக்கது.

## மூன்றிலிருபங்கு பலத்துடன் மீண்டும் ஆட்சிக்கு வருவேன்

### நவாப்ஷெரிப் நம்பிக்கை

(இஸ்லாமாபாத்)

மூன்றிலிரு பங்கு பெரும்பான்மைப் பலத்துடன் மீண்டும் பதவிக்கு வருவேன் என்று பதவியைத் துறந்திருக்கும் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாப் ஷெரிப் தெரிவித்தார்

பதவியைத் துறந்த பின்னர் சொந்த மாநிலமான லாகூருக்கு திரும்பிய அவர் அங்கு வரவேற்ற ஆதரவாளர்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் அக்டோபரில் நடைபெறவிருக்கும் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்தில் மூன்றிலிருபங்கு பெரும்பான்மையை தமது கட்சி பெறும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

## எப்.பி.ஐ. டைரக்டர் பதவி விலக அறிவுறுத்தல்

(வாஷிங்டன்)

ராஜினாமாச் செய்யுங்கள் இன்றேல் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள்என்று அமெரிக்க சமஷ்டி புலனாய்வு பிரிவான எப். பி. ஐ உளவுப் பிரிவின் டைரக்டர் வில்லியம் செஷ்னஸ் அறிவுறுத்தப்பட்டுள்ளார். அட்டோர்னி ஜெனரல் ஜெனட் ரெனோவினால் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்ட வில்லியம் செஷ்னஸ் ரெனோவின் அறிவுறுத்தலை அடுத்து நிதி அமைச்சை விட்டு வெளியேறும் போது நடை பாதையில் தவறிவிழுந்ததால்கையின் இரு இடங்களில் முறிவு ஏற்பட்டது.

ஜனாதிபதி ரொனால்ட் றேகனால் நியமனம் செய்யப் பட்ட வில்லியம் செஷ்னஸ் தமது பத்தாண்டு பதவிக் காலத்தில் ஆறு ஆண்டுகளை மட்டுமே பூர்த்தி செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தவறான நிர்வாகம் காரணமாகவே செவுன்ஸ் பதவி விலக வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டு வருகிறார்.

## பெருந்துறை தொகுதிக்கு செப்டம்பர் 4இல் தேர்தல்

(சென்னை)

பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தல் செப்டம்பர் நான்காம் திகதியன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையகம் நேற்றுப் புதுடில்லியில் வெளியிட்ட அறிவிப்பு ஒன்றில் மேலும் ஏழு மாநிலங்களிலுள்ள பத்துசட்டமன்றத் தொகுதிக்கான தேர்தல்கள் இதனுடன் நடாத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 3ஆம் திகதி வேட்பு மனுத்தாக்கல் ஆரம்பமாகுமெனவும், பத்தாம் திகதி வேட்பு மனுத் தாக்கலுக்கான இறுதித் தினம் எனவும் மறுநாள்வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப் படுமெனவும் செப்டம்பர் 4இல் தேர்தல் நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாதம்

## மாவீரர் உருவப்படங்கள் மேலும் வெளிவந்துள்ளன

ஆ. க. வெ. நடவடிக்கையின் போது தற்கொடையாளர்களான பின்வரும் மாவீரர்கள் உருவப்படங்கள் அண்மையில் வெளிவந்துள்ளன.

01. லெப். பிந்தூரன் — அன்ரனி ஜெராட் லோகு — மன்னார்
02. வீ. வே. அமுதப்பிரியா — அகிலகுமாரி பரமலிங்கம் — புங்குடுதீவு- யாழ்
03. 2-ம் லெப். விஜயா — ஜெயவதனி தம்பிப்பிள்ளை — பருத்தித்துறை
04. கப்டன் விஜிதா/விஜி — சிவாஜினி சின்னப்பு — உரும்பிராய்
05. லெப். நிலாம்ஸ் — கனகரத்தினம் லதீஸ்வரன் — சாவகச்சேரி
06. 2-ம் லெப். கோகிலா — மங்கையர்திலகம் குணநாயகம் — திருமலை
07. 2-ம் லெப். கவி — ராஜி சீவரட்ணம் — உடுப்பிட்டி
08. வீ.வே. திலகன் — திருச்செல்வம் இங்ஸிலி ஆம்ஸ்ரோங் கஜேந்திரன் — பாஷையூர், யாழ்
09. லெப். யோகன் — கிட்ணர் உதயகுமார் — மட்டு.
10. லெப் வினோஜா — விஜிதா சுவாம்பிள்ளை — பாஷையூர்
11. லெப். வினோத் — தர்மலிங்கம் தயாளன் — பருத்தித்துறை
12. லெப். சுஜேந்திரா — ஜெயந்தினி வேலாயுதபிள்ளை — மட்டு.
13. வீ. வே. சந்திரா — மல்லிகா பொன்ராசா — வவுனியா
14. வீ. வே. மாலா — ரோஸ்றங்கலிக்கா யாக்கோப் சில்வா — புத்தளம்
15. வீ. வே. அன்புதாஸ் — மாணிக்கம் துஸ்யந்தன் — திருமலை

1991ஆம் ஆண்டில் ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவு பிரதேசத்தில் தம்மைத் தற்கொடையாளர்களாக்கிக் கொண்ட மேல்வரும் மாவீரர்களின் போஸ்ரர் படங்களை சிறு அன்பளிப்பு செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனை, கொக்குவிலில் பெற்றுக் கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

## கவிஞர்களே!

தமிழ்த் தேசிய இன ஒடுக்குமுறை-விடுதலைப் போராட்டம் பற்றிய கவிதைத் தொகுப்பொன்றில் சேர்க்கப்படக்கூடிய கவிதைகளை எதிர்பார்க்கின்றோம்.

★ 1986 தை மாதத்திலிருந்து எழுதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட அல்லது பிரசுரிக்கப்படாத இரண்டு கவிதைகளை அனுப்பிவையுங்கள்.

★ முடிவு திகதி : 31-07-1993

## பட்டப் படிப்பு நூல்கள்

மானிப்பாய் பட்டின சபை பொது நூலகத்தில் பட்டப் படிப்பினை மேற்கொள்வதற்கு தேவையான புத்தகங்கள் புதிதாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கலை, வர்த்தக மற்றும் விஞ்ஞான, உள்வாரி, வெளிவாரி மாணவர்கள் இப்பயனை அடையலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை க. பொ. த உயர்தர மாணவர்களுக்கான கடந்தகால பயிற்சி புத்தகங்களும மாணவர்களின் நலன் கருதி பாவனைக்கு விடப்பட்டு வருகின்றது (05)

## உற்சவ கால விசேட கருமபீடம்

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி மேற்தரக் கிளையினால் ஒரு விசேட கருமபீடம் இன்று காலை 9–30 மணியளவில நல்லூர் கந்தசுவாமி கோயிலில் அமைந்துள்ள நாவலர் மண்டபத்தில் திறக்கப்படும். இக் கருமபீடம் உற்சவகாலம் முடிவடையும் நாள் வரை திறந்திருக்கும். இலங்கைவங்கி தனது 55ஆவது வருடத்தை 01-08-1993ல் ஆரம்பிக்கின்றதை முன்னிட்டு இக் கருமபீடம் விசேடமாகத் திறக்கப்படுகின்றது.

### வடபகுதி

தேங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. போக்குவரத்து கட்டணங்களை யார் செலுத்துவது என்பதில் திணைக்கள அதிகாரிகளுக்கிடையில் ஏற்பட்ட இழுபறி நிலையே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 21 —

தாயக மண்ணில் 24 —

1978 அரசியலமைப்பு

# பாராளுமன்றத்திற்கு அதிக அதிகாரம் வழங்கியுள்ளது

## ஜே.ஆர். ஜெயவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசியல் சட்டத்தில் இருக்கும் பெறுமதியான சில அம்சங்களை அப்படியே தொடர்ந்து வைத்திருக்க வேண்டியது அவசியமானதாகும். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

இலங்கை தேயிலை சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்: அடிப்படை உரிமைகளை நியாயப்படுத்தக்கூடிய சில மசோதாக்களை அங்கீகரிக்க சபாநாயகருக்கு அதிகாரமளித்தல், பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடிப்பதற்கான சட்டத்திற்கு மக்களின் அங்கீகாரத்தை பெறுதல், அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்படாத ரீதியிலான அதிகாரங்கள் மற்றும் நீதிபரிபாலன சேவைக் கமிஷன்களை நியமித்தல் என்பன போன்றவை இன்றைய அரசியல் சட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

பாராளுமன்றத்தின் பெறுமதியை 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பு உண்மையிலேயே கூட்டியுள்ளது. ஜனாதிபதியின் அங்கீகாரமின்றி சட்டத்தை இயற்றுவதற்கு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

## மருத்துவமனை ஊழியர் 10 பேருக்கு பதவி உயர்வு

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா மருத்துவமனையில் கடமையாற்றும் சுமார் 10 ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது.

விடுதிஎழுதுவினைஞர்களாக சுமார் 5 பேருக்கு அடுத்த மாதம் 2ஆம் திகதியில் இருந்தும், மூன்று பேருக்கு மேற்பார்வையாளர்களாக இம்மாதம் 15ஆம் திகதியில் இருந்தும் பதவி உயர்வுகள் வழங்கப்படுவதற்கான கடிதம் வழங்கப்பட்டுள்ளது

இவற்றைவிட 2 பேருக்கு சமையற்காரர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது

### மனத்தளவில்

கலவரத்திற்கான காரணங்கள் அப்படியே உள்ளன அவற்றைத் தீர்க்க திருப்திகரமாக எதுவும் செய்யப்படவில்லை. தன்னாட்சி எனும் தமிழரின் கோரிக்கை இன்னமும் சரியாகக் கவனிக்கப்படவில்லை. இனப்பிரச்சினையைத் தீர்க்க அரசியல் ரீதியில் இன்னமும் எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. போர் தொடரும் வரையில் பொருளாதாரம் சீராகப் போவதில்லை இந்த படிப்பினையை ஏற்க விரும்பாது அரசு இன்னமும் அல்லாடுகிறதுஎன கிறிஸ்மொறிஸ் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்.

### வீதித்தடைகள்

ஆடியபாதம்வீதியில் இருந்து யாழ்நகர் நோக்கிச் செல்லும் வீதியில் சிவன்கோயில் சந்தி.

பருத்தித்துறை வீதியில் இருந்து யாழ். நகருக்கு வரும் வீதி சங்கிலியன்சிலையுடனும்.

மேற்கூறிய வீதிகள் தடை செய்யப்பட்டிருப்பதால் பின்வரும் வீதிகளில் போக்குவரத்துச்செய்யலாம். அவையாவன;

பருத்தித்துறை - யாழ் வீதிக்குப் பதிலாக கச்சேரி நல்லூர் வீதி.

கோவில்வீதி - யாழ்நகர் நோக்கி இதற்குப் பதிலாக, சிவன் வீதிச் சந்தியால் பலாலி வீதிக்கு.

யாழ்நகர் – பருத்தித்துறை வீதியைப் பாவிப்பவர்கள் ஆனைப்பந்தி சந்தியில் இருந்து நாவலர் வீதி வழியாக சென்று கச்சேரி நல்லூர் வீதியால் செல்லலாம் என தமிழீழ காவல்துறை அறியத்தருகின்றது.

### ஜனாதிபதியின்

தற்போது ஜனாதிபதியின்றி ஒருசில அமைச்சர்களே மட்டக்களப்பு சென்றுள்ளனர். எனினும் மக்கள் வெளியே நடமாடவில்லை நடமாடும் செயலகத்திற்கு வந்தவர்களிலும் பலர் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு முன்பாகவே வரிசையில் நின்றிருந்தனர். காணாமற் போன தம் உறவினர் கதி அறியவே அவர்கள் அங்கு கியூவில் நின்றனர் என மட்

## கொழும்பிலிருந்து மோட்டார் வாகனம்

[யாழ்ப்பாணம்]

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினரின் பாவனைக்கென கொழும்பிலிருந்து மோட்டார் வாகனமொன்று எடுத்துவரப்பட்டுள்ளது. இது நேற்று குமண கப்பலிலிருந்து இறக்கி வரப்பட்டது.

### லெப். செல்லக்கிளி

அணிவித்தார். தொடர்ந்து அருகில் இருந்த கேணல்கிட்டு, லெப். கேணல் சரா. மற்றும் வீரவேங்கைகள் ராஜீவ், காந்தன், பேபி அருணா ஆகியோரின் உருவப் படங்களுக்கும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

ஈகைச்சுடரை விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. சுகு, நிதர்சன பொறுப்பாளர் திரு. ஜவான் (தமிழழகன்) ஆகியோர் ஏற்றிவைத்தனர்

இதனைத் தொடர்ந்து யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் திரு. இளம்பருதி மாவீரன் செல்லக்கிளி அம்மான் நினைவாக உரை நிகழ்த்தினார்.

இதேவேளை நேற்று மாலை செல்லக்கிளி அம்மான்கிராமத்தில் திருமலை மக்களால் லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மானின் பத்தாம் ஆண்டு நினைவு வீரவணக்கக் கூட்டம் நடாத்தப்பட்டது.

திரு நல்லையா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வினை சமூக பொருளாதார வளர்ச்சித்திட்ட யாழ் மாவட்ட பொறுப்பாளர் திரு பிருதுகாந் ஈகைச்சுடரேற்றி ஆரம்பித்து வைத்தார். முன்னாள் திருமலை மாவட்ட தளபதி

## பம்பைமடுவில் புலிகள் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா பம்பைமடு இராணுவக் காவலரண் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். நேற்றுமுன் தினமிரவு 8.25 மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதலின் போது இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை விடுதலைப்புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## விபத்தில் சிப்பாய் பலி

(கொழும்பு)

மன்னாரில் இராணுவ கவச வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதால் சிப்பாய் ஒருவர் பலியானார்.

மேற்படி சம்பவம் கடந்த 15ஆம் திகதி நடைபெற்றதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

### கலந்துரையாடல்

சகல வீடியோ, ஓடியோ உரிமையாளர்களுக்குமான கலந்துரையாடலொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள அரசியல் துறை, யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளதால் அதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்

### நாம்

களுக்கும் அவர்களது பெற்றோர் மற்றும் உறவினர்களால் மலர்மாலை அணிவிக்கப்பட்டது இதில் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் இளையவன், யாழ் மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந் நிகழ்வில் திரு. தேவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்; தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்திய தமிழீழ விடுதலைப் போராட்டம் மிகுந்த வளர்ச்சியடைவதற்கு ஏதுவாக இருந்த வரலாற்றுப் பெருமை வாய்ந்த திருநெல்வேலித் தாக்குதல் 1983 ஆம் ஆண்டு இதேமாதம் இதே நாளில் தான் இடம் பெற்றது

நாம் கடந்து வந்திருக்கின்ற இந்தப் பத்து ஆண்டுகால

போராட்டம் பற்றிய கவிதைத் தொகுப்பொன்றில் சேர்க்கப்படக்கூடிய கவிதைகளை எதிர்பார்க்கின்றோம்.

★ 1986 தை மாதத்திலிருந்து எழுதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட அல்லது பிரசுரிக்கப்படாதஇரண்டு கவிதைகளை அனுப்பிவையுங்கள்.

★ முடிவு திகதி : 31-07-1993

★ முகவரி : தமிழ்த்தாய் பதிப்பகம்,
664, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7064)

## கல்வாரி தலைமைத்துவ பயிற்சி நிலையம்

இடம்: கல்வாரி பூரண சுவிசேஷ ஊழியங்கள்
இல. 89, பிறவுண் வீதி, கொக்குவில்

திகதி: 26-07-1993

நேரம்: காலை 9-00 மணி.

மேற்குறிப்பிட்ட பயிற்சி நிலையத்தின் ஆரம்ப ஆராதனைக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

லெஸ்லி மத்தியூஸ்
அதிபர்

(5518)

## தேவை

1 மின் அணுவியல் (ELECTRONIC) வல்லுனர்கள் விண்ணப்பிக்கவும். விண்ணப்பதாரி மின் அணுவியற் சாதனங்களை புதிதாக உருவாக்கவும், சரிபார்க்கவும் கூடியவராக இருத்தல் வேண்டும். அனுபவ, தகுதிச் சான்றிதழ்களின் விபரத்தையும் விண்ணப்பத்தில் குறிப்பிடவும்.

2. வீடியோ, ஓடியோ பிரதி செய்தல் மிச்சிங் செய்தல், தணிக்கை செய்தல் ஆகியவற்றில் நீண்டகால அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.


01-08 93 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல. 196
மே/பா. ஈழநாதம்.
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7078)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தாயின் மடியில் | தாயக மண்ணில்
21 — 06 — 1964 | 24 — 07 — 1991



## கப்டன் நந்தன்

(சின்னத்துரை ஜீவானந்தன்)
மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்

(5519)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
14-04-1971

வீரச்சாவு
28-07-1990

திதி: 24-07-1993

## வீரவேங்கை பிரசன்னா

[புதியாக்குட்டி தயாபரன்]

ஓ பிரசன்னா! நீ வீரத்துடன் போராடும் வேளையில் எதிரியின் குண்டு உன்மார்பினை துளைத்ததே. மகிழ்வுடன் வீரச்சாவினை அணைத்தாய் மண்ணிற்காய். ஓ மாவீரனே! உன் உடல் தான் எரிந்து போனது உணர்வுகள் எரியவில்லை.

தயாபரன் வீதி,
ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள்

(5517)

க்களப்பு சென்றுள்ளனர். எனினும் மக்கள் வெளியே நடமாடவில்லை நடமாடும் செயலகத்திற்கு வந்தவர்களிலும் பலர் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு முன்பாகவே வரிசையில் நின்றிருந்தனர். காணாமற் போன தம் உறவினர் கதி அறியவே அவர்கள் அங்கு கியூவில் நின்றனர் என மட்டக்களப்பு சென்ற பி.பி.ஸியின் கொழும்பு செய்தியாளர் சியாகா நூவேசு குறிப்பிட்டார்.

### ஒற்றர்

அவர் கருத்தரங்கில் தொடர்ந்து பேசும்போது யாழ். மாவட்டத்தை மட்டுமல்ல. நாட்டின் மூன்றில் இரண்டு கடலோரப் பகுதியை தமக்குரியது என ஈழவாதிகள் கூறுகின்றனர். இதற்கென இவர்கள் பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா, ஜேர்மனிமுதலிய நாடுகளுக்கு பயணம் செய்து பிரசாரம் செய்கின்றனர்.

இந்த நாட்டில் நடப்பது இன வன்முறைகள் அல்ல. தற்போதைய பிரச்சினையை இனப்பிரச்சினை என்று கூறுவது தவறு.

விடுதலைப்புலிகளைபோரின் மூலமே நிராயுதபாணிகளாக்க முடியும். ஒவ்வொரு தடவையும் நாம் அவர்களுடன் பேச்சு நடத்தும் போது அனைத்தையும் இழக்கின்றோம். மக்களினால் இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவர முடியாவிட்டால் முப்படைகளுக்கும் அதற்கான அனுமதியை வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் பேசிய கும்புக்கடவல தீரானந்த தேரோ, சிங்கள பௌத்தர்கள் எப்போதும் தமிழர்களால் துன்பப் பட்டுவந்துள்ளனர். வடக்கில் உள்ள பல பௌத்த விகாரைகள் தமிழர்களால் அழிக்கப்பட்டுள்ளன. தமிழர் இப்போது நாட்டின் எங்கும் வாழமுடியும். சிங்களவருக்கு அந்தச் சுதந்திரம் உண்டா? தமிழர்களுக்கு 250,000 ஏக்கர்களைக் கொடுத்து விட்டு நாம் எங்கே போவது? என்று கேள்வி எழுப்பினார்.

கிராமமக்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க செல்லும் சில சக்திகள் பௌத்தர்களை கிறிஸ்தவர்களாக மதமாற்றுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

வீரவணக்கக் கூட்டம் நடாத்தப்பட்டது.

திரு நல்லையா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வினை சமூக பொருளாதார வளர்ச்சித்திட்ட யாழ் மாவட்ட பொறுப்பாளர் திரு பிருதுகாந் ஈகைச்சுடரேற்றி ஆரம்பித்து வைத்தார். முன்னாள் திருமலை மாவட்ட தளபதி சந்தோசம் மாஸ்ரரின் தந்தையார் திரு கணபதிப்பிள்ளை மற்றும் திருமலை மக்கள் சார்பாக திரு. இ கணபதிப்பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

### கடவுச்சீட்டு

டைய கடவுச் சீட்டுக்களில் சிங்களப் பெயர்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. சந்தேக நபரின் வீட்டிலிருந்து பத்துக் கடவுச் சீட்டுக்களையும் பொலிசார் கைப்பற்றினர்.

சந்தேக நபரின் பின்லாந்து வியாபார ஸ்தாபனத்தில் வேலை செய்வதற்காகத் தாம் பின்லாந்து செல்வதாக கைதாகிய இளைஞர்கள் தெரிவித்தனர். சந்தேக நபருக்குப் பின்லாந்தில் வியாபார நிலையம் இல்லை என்பது விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது இங்கிலாந்து, நோர்வே ஆகிய நாடுகளுக்குப் போலிப் பயண ஆவணங்களில் தமிழ் இளைஞர் பயணம் செய்ய சந்தேக நபர் உதவியதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நோர்வேயிலிருந்து கொழும்பு வந்துள்ள பொலிஸ் குழு சந்தேக நபரை விசாரணை செய்துவருகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் மிகுந்த வளர்ச்சியடைவதற்கு ஏதுவாக இருந்த வரலாற்றுப் பெருமை வாய்ந்த திருநெல்வேலித் தாக்குதல் 1983 ஆம் ஆண்டு இதே மாதம் இதே நாளில் தான் இடம் பெற்றது

நாம் கடந்து வந்திருக்கின்ற இந்தப் பத்து ஆண்டுகால இடைவெளிக்குள் எத்தனை எத்தனை வேதனைகளையும் சோதனைகளையும் நாம் சந்தித்ததுமாத்திரமல்ல உலகமே வியந்து நிற்கின்ற அளவிற்கு சாதனைகளையும் படைத்து நிற்கின்றோம் என்றார்.

### தமிழர்

யில நாம் ஒரு தீர்வை முன்வைக்க வேண்டிய அவசியமில்லை எனக்குறிப்பிட்ட திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசு தீர்வு ஒன்றை முன்வைத்தால் அதை தாம் பரிசீலிக்க தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

இவரின் இப்பேட்டி தொடர்பாக கருத்து தெரிவித்த பி.பி.ஸி கட்சிகளிடையே காணப்படும் குறுகிய அரசியல் லாபம் ஈட்டும் போக்கினால் நாட்டு மக்களே பாதிப்படைகின்றனர் எனச் சுட்டிக் காட்டியது.

### சந்தேகநபரை

தலை செய்வதாக 1,50,000 ரூபா பேரம் பேசி முற்பணமாக 30,000 ரூபா லஞ்சம் ஆகஸ்ட் 8 - 1991 அன்று கொழும்பில் பெற்றார் என்று குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 23-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10533

வடபகுதிக்குஉள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-0089 41-9111 26-4896 24-4726 26-9611
26-1098 24-8603 24-3594 28-1799 28-4550
42-0728 26 5112 24-2161 26-1169.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
27-9707.